நகர்மன்றம்,
போடிநாயக்கனூர், நாள்.17.07.2020

2020ம் ஆண்டு ஜுூ லை மாதம் 17.07.2020ம் தேதி வெள்ளிகிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திரு. தே,கிருஷ்ணமூர்த்தி எம்.காம்.,
ஆணையாளர் (ம) தனிஅலுவலர்

1) அ) போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு எண்.13–ல் பங்கஜம் பிரஸ் தெற்கு தெரு எண்.1ல் உள்ள 3" Sulice Valve கைடு நட் பழுதடைந்ததை சரிசெய்து பொருத்துவதற்கு ஆகும் செலவினம் ரூ.2100/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

ஆ) மேலும் மேற்படி பணியினை செய்வதற்கு அவசர அவசியம் கருதி 22.06.2020அன்று நேரிடையாக விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனம் | தொகை |
|---|---|---|
| 1 | கனகராஜ் லேத் & வெல்டிங் டிராக்டர் ஒர்க்ஸ், போடி. | ரூ.2100/– |
| 2 | மரகதம் லேத் கிரில் & டிராக்டர் வெல்டிங் ஒர்க்ஸ், போடி. | ரூ.2300/– |
| 3 | சரண்யா லேத் & வெல்டிங் ஒர்க்ஸ், போடி. | ரூ.2400/– |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் **கனகராஜ் லேத் & வெல்டிங் டிராக்டர் ஒர்க்ஸ், போடிநாயக்கனூர்.** நிறுவனத்தாரின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் மேற்படி விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்:1529/2020/இ1)**
**தீர்மான எண் : 155** அனுமதி வழங்கப்பட்டது.

2) இந்நகராட்சியில் புதிதாக கட்டிட வரைபட வரைவாளராக பதிவு செய்ய கீழ்க்கண்ட 5 நபர்களை 06.07.2020ஆம் தேதியில் Screening Committee –ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதனடிப்படையில் மேற்படி கமிட்டி ஒப்புதல் வழங்கிய 5 நபர்களை கட்டிட வரைபட வரைவாளர்களாக நியமனம் செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | திருவாளர்களின் பெயர்கள் | கல்வித் தகுதி |
|---|---|---|
| 1 | சு.கார்த்திக், த/பெ.சுப்பிரமணி | M.E |
| 2 | கோ.முருகானந்தன், த/பெ. கோவிந்தன் | I.T.I.Draughtsman Civil |
| 3 | பா.கருப்பன் , த/பெ. பாண்டி | D.C.E. |
| 4 | சி.காளிராஜ், த/பெ. சின்னான் | B.E. Civil |
| 5 | சௌ.மணிவண்ணன், த/பெ. சௌந்தரராஜன் | D.C.E. |

( ந.க.எண்.1177/2019/எப்1 )
**தீர்மான எண் : 156** அனுமதி வழங்கப்பட்டது.

3) போடிநாயக்கனூர் நகராட்சியில் கொரானா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள தேவையான லைசால் 500லிட்டர் தேவைப்படுவதால் ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்ட Tamil Nadu Multipurpose Indco serve நிறுவனத்திற்கு இந்நகராட்சி விநியோக உத்திரவு எண்956/2020/H2. நாள். 23/06/2020.ன் படி விநியோக உத்திரவு வழங்கப்பட்டு நாளது தேதி வரை லைசால் பெறப்படவில்லை. ஆதலால் மேற்படி உத்தரவு 29.06.2020 அன்று ரத்து செய்யப்பட்டது எனவே, பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்கு உடனடியாக தேவைபடுவதாலும் மேற்படி லைசாலினை வேறு தனியார் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்ய

03.07.2020 அன்று விலைப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு இரண்டு நிறுவனங்களில் இருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. அதனை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | எண்ணம் (1 லிட்டர்) | தொகை. ரூ. (வரி 18% உட்பட) |
|---|---|---|---|
| 1 | நாகப்பா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், காரைக்குடி. | 1 | 247.80 (210+37.80) |
| 2 | ஈஸ்வரி என்டர்பிரைஸஸ், தேவகோட்டை. | 1 | 174.65 (148+26.65) |

பொது சுகாதார அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய m/s ஈஸ்வரி என்டர்பிரைஸஸ், தேவகோட்டை, என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் அதனை ஏற்றும் நிறுவனத்திற்கு விநியோக உத்திரவு வழங்கியதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.956/2020/எச்2**

**தீர்மான எண் : 157** அனுமதி வழங்கப்பட்டது.

4) போடிநாயக்கனூர் நகராட்சி எல்லைக்குள் உள்ள வார்டு எண்.12 கதவு எண்.12/1 சந்தை பேட்டை தெருவில் உள்ள சொத்து வரிவிதிப்பு பழைய எண்.120/19280, புதிய எண்.120/012/00562 சொத்துவரி விதிப்பானது திரு.எஸ். சேதுராம் என்ற பெயரில் குடியிருப்பு பயன்பாட்டில் உள்ளது. குடிநீர் குழாய் இணைப்பு பழைய எண்.120/2264, புதிய எண்.120/012/00164 குடிநீர் குழாய் இணைப்பானது வணிக பயன்பாட்டில் உள்ளது. இடம் நேராய்வு செய்ததில் மேற்படி சொத்து குடியிருப்பு பயன்பாட்டில் இருப்பதால், குடிநீர் குழாய் இணைப்பையும் குடியிருப்பு பயன்பாட்டாக 2020–2021 இரண்டாம் காலாண்டு முதல் மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்:1166/2020/இ2)**

**தீர்மான எண் : 158** அனுமதி வழங்கப்பட்டது.

5) போடிநாயக்கனூர் நகராட்சிக்கு 2020–2021ம் ஆண்டிற்கு தலைமை குடிநீர் நிலையத்திற்கு ஆலம் விநியோகம் செய்வதற்கு 05.06.2020–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1 ஸ்ரீ சத்யா டைஸ் & கெமிக்கல்ஸ்,
ஆண்டிபட்டி.

2 பியூப்பில் கெமிக்கல் இன்டஸ்டிரிஸ்,
ஆண்டிபட்டி.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் 2 ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | அளவு | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை (GST உட்பட) |
|---|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி, தலைமை குடிநீர் நிலையத்திற்கு ஆலம் விநியோகம் செய்யும் பணி | 1000/ கிலோ | 2.50/– | 1. ஸ்ரீ சத்யா டைஸ் & கெமிக்கல்ஸ், ஆண்டிபட்டி. | ரூ.24.49/1கிலோ |
| | | | | 2. பியூப்பில் கெமிக்கல் இன்டஸ்டிரிஸ், ஆண்டிபட்டி. | ரூ.25.96/1கிலோ |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **ஸ்ரீ சத்யா டைஸ் & கெமிக்கல்ஸ், ஆண்டிபட்டி.** நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்:778/2020/இ1)**

**தீர்மான எண் : 159** அனுமதி வழங்கப்பட்டது.

6) போடிநாயக்கனூர் நகராட்சிக்கு 2020–2021ம் ஆண்டிற்கு தலைமை குடிநீர் நிலையம், மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை சுத்தம் செய்வதற்காக பிளிச்சிங் பவுடர்(1 டன்) விநியோகம் செய்வதற்கு 05.06.2020–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1 ஸ்ரீ சத்யா டைஸ் & கெமிக்கல்ஸ்,
ஆண்டிபட்டி.

2 பியூப்பில் கெமிக்கல் இன்டஸ்டிரிஸ்,
ஆண்டிபட்டி.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் 3 ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | அளவு | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை (GST உட்பட) |
|---|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி, தலைமை குடிநீர் நிலையம், நீர்தேக்க தொட்டிகளை சுத்தம் செய்வதற்கு பிளிச்சிங் பவுடர்(1 டன்) விநியோகம் செய்தல் | 1000/ கிலோ | 0.50/– | 1. ஸ்ரீ சத்யா டைஸ் & கெமிக்கல்ஸ், ஆண்டிபட்டி. | ரூ.47.20/1கிலோ |
| | | | | 2. பியூப்பில் கெமிக்கல் இன்டஸ்டிரிஸ், ஆண்டிபட்டி. | ரூ.50.04/1கிலோ |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **ஸ்ரீ சத்யா டைஸ் & கெமிக்கல்ஸ், ஆண்டிபட்டி.** நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்:612/2020/இ1)**

**தீர்மான எண் : 160** அனுமதி வழங்கப்பட்டது.

7) போடிநாயக்கனூர் நகராட்சியில் உள்ள பிரிண்டர்கள் 11 எண்ணம் ஓர் ஆண்டிற்கு பராமரிப்பு பணிகள் செய்வதற்கு 17.06.2020–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1 M/s. Star Office Solution,
Uthamapalayam.

2 M/s. Reva Tech Coppier,
Madurai.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் 3 ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | எண்ணம் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை (GST 18% உட்பட) |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சியில் உள்ள 11 எண்ணம் பிரிண்டர்கள் ஓர் ஆண்டிற்கு பராமரிப்பு பணி | 1 | 1,00,000 | 1. M/s. Star Office Solution, Uthamapalayam. | 0.41 பைசா |
| | | | | 2. M/s. Reva Tech Coppier, Madurai. | 0.49 பைசா |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **M/s. Star Office Solution, Uthamapalayam.** நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்:527/2020/இ1)**

**தீர்மான எண் : 161** அனுமதி வழங்கப்பட்டது.

8) இந்நகராட்சிப் பகுதியில் பரவி வரும் கொரோனா தடுப்பு பணிக்கு ஹைபோ குளோரைடு சொலுசன் தெளிக்கும் பணிக்காக 5 எண்ணம் மெக்கானிக்கல் ஸ்பிரே மிசின் வாங்கி பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது. மேற்படி மிஷின் குளோரின் படிவத்தின் தாக்கம் காரணமாக அடிக்கடி பழுதடைந்து வருவதால், கொரோனா தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுச் சுகாதார நலன் கருதியும் மேற்படி இயந்திரம் வாங்கிய விஜயா அக்ரோ ஏஜென்சீஸ் நிறுவனத்தின் மூலம் பழுது வேலைகள் மேற்கொள்ளவும், உதிரிபாகங்கள் மாற்றிடவும் ஆகும் செலவுத் தொகை ரூ.11,365/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் செலவினத்தை விதிமீறல் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் கடைக்காரர்களிடமிருந்து பெறப்பட்ட அபராதத் தொகையில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்:956/2020/H2)**

**தீர்மான எண் : 162** அனுமதிக்கப்பட்டது.

9) அ) இந்நகர் பகுதியில் கொரோனா வைரஸ் பரவல் அதிகமாகவும் வேகமாகவும் பரவி வருவதால் அலுவலக பணியாளர்கள், அலுவலகத்திற்கு வரும் பொது மக்கள், பொறியியல் பிரிவு களப்பணியாளர்கள், துப்புரவு பணியாளர்கள், DBC பணியாளர்கள் அனைவரையும் காய்ச்சல் சோதனைக்கு உட்படுத்துவது அவசியம் ஆகும். எனவே Infrared Thermometer மற்றும் Digital Oxy meter வாங்கி வழங்கவும் அதற்கு ஆகும் செலவுத் தொகை ரூ.2,200/—க்கும் செலவினத்காத விதிமீறல் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் கடைக்காரர்களிடமிருந்து பெறப்பட்ட அபராதத் தொகையில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ஆ) மேற்படி பொருள் வாங்குவதற்கு நேரிடையாக பெறப்பட்ட விலைப்புள்ளிகளும் மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி விபரம் GST உட்பட 1 எண்ணத்திற்கு | |
|---|---|---|---|
| | | Infrared Thermometer | Digital Oxy meter |
| 1 | International Cargo Movers, New Delhi | 1,357 | 840 |
| 2 | Rayal Club Munnar | 1,593 | 1008 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **International Cargo Movers, New Delhi** என்ற நிறுவனத்தாரின் விலைப்புள்ளிகுறைவாக இருப்பதால், அதனை ஏற்று சப்ளை உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்:956/2020/H2)**

**தீர்மான எண் : 163** அனுமதி வழங்கப்பட்டது.

10) அ) இந்நகராட்சி பொது சுகாதார அவசிய அவசரம் கருதி கொரேனா தடுப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினங்களுக்கு ஏற்கனவே இந்நகர்மன்ற தீர்மான எண். 153 நாள் 30.06.2020ல் மன்ற அனுமதி பெறப்பட்ட நிலையில் தற்போது கொரேனா தொற்று வேகமாகவும் அதிக அளவிலும் பரவி வருவதால், இந்நகராட்சியின் முக்கிய இடங்களான 1.கட்ட பொம்மன் சிலை, 2.போஜன் பார்க் மற்றும் 3.வ.உ.சி.சிலை ஆகிய இடங்களில் ஒலிபெருக்கி மூலம் கொரோணா குறித்த விழிப்புணர்வு விளம்பரம்

மேற்கொள்ளவும் பணியைச் செய்யவும் அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.42000/ க்கும் செலவினத்தை விதிமீறல் தொடர்பாக பொது மக்கள் மற்றும் கடைக்காரர்களிடமிருந்து பெறப்பட்ட அபராதத் தொகையில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ஆ மேற்படி ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 09.07.2020 அன்று செய்யப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | மொத்த தொகை. ரூ. |
|---|---|---|
| 1 | குமரன் ரேடியோஸ் & லைட் ஹவுஸ், போடி | 3,900/- |
| 2 | அம்மன் ரேடியோஸ் & லைட் ஹவுஸ், போடி | 3,600/- |
| 3 | ஸ்ரீ கௌமாரியம்மன் மியூசிக்கல்ஸ் & ரேடியோஸ், போடி | 3,000/– |

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்காணும் 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/S ஸ்ரீ கௌமாரியம்மன் மியூசிக்கல்ஸ் & ரேடியோஸ், போடி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.956/2020/எச்2**
**தீர்மான எண் : 164** அனுமதி வழங்கப்பட்டது.

**11)** இந்நகராட்சி பொது சுகாதார அவசிய அவசரம் கருதி கொரேனா தடுப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவிணங்களுக்கு ஏற்கனவே இந்நகர்மன்ற தீர்மான எண். 153 நாள் 30.06.2020ல் மன்ற அனுமதி பெறப்பட்ட நிலையில் தற்போது கொரேனா தொற்று வேகமாகவும் அதிக அளவிலும் பரவி வருவதால், பொதுமக்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பொதுமக்கள் வெளியே வரும்போது முகவுறை அணியாமல் சமூக இடைவெளி கடைபிடிக்காமல் போன்ற நபர்களுக்கு அபராதம் விதிக்கும் வகையில் அபாராத ரசீது புத்தகம் 20 எண்ணம் அச்சிடுவதற்கு 24.06.2020 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கபடுகிறது.

| வ. எண் | விவரம் | தொகை. ரூ. (ஒரு புத்தகம்) 100 தாள்(1+1 வீதம்) |
|---|---|---|
| 1 | ஸ்ரீ ஆனந்தம் ஆப்செட் பிரஸ், போடி | 150/- |
| 2 | ஈஸ்வரி பிரிண்டர்ஸ், போடி | 180/- |

பொது சுகாதார அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஸ்ரீ ஆனந்தம் ஆப்செட் பிரஸ், போடி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.மேலும் செலவுத்தொகை ரூ.3000/- ஐ விதிமீறல் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் கடைக்காரர்களிடமிருந்து பெறப்பட்ட அபராதத் தொகையில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**ந.க.எண்.956/2020/எச்2**
**தீர்மான எண் : 165** அனுமதி வழங்கப்பட்டது.

**12)** இந்நகராட்சி பொது சுகாதார அவசிய அவசரம் கருதி கொரேனா தடுப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவிணங்களுக்கு ஏற்கனவே இந்நகர்மன்ற தீர்மான எண். 153 நாள் 30.06.2020ல் மன்ற அனுமதி பெறப்பட்ட நிலையில் தற்போது கொரேனா தொற்று வேகமாகவும் அதிக அளவிலும் பரவி வருவதால், பொதுமக்கள் வெளியே வராமல் தடுக்கும் வகையில் பொதுமக்களுக்கு காய்கறி, பழங்கள்,

மளிகை பொருட்கள் போன்றவற்றை வீட்டிற்க்கு கொண்டுபோய் சேர்க்கும் வகையில் தேவையான துண்டு பிரசுரம் அச்சிடுவதற்கு 10.07.2020 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கபடுகிறது.

| வ. எண் | விவரம் | தொகை. ரூ. (இரண்டு பக்கம், 15000 பிரதிக்கு) |
|---|---|---|
| 1 | ஸ்ரீ ஆனந்தம் ஆப்செட் பிரஸ், போடி | 12,000/- |
| 2 | ஈஸ்வரி பிரிண்டர்ஸ், போடி | 12,700/- |

பொது சுகாதார அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஸ்ரீ ஆனந்தம் ஆப்செட் பிரஸ், போடி நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம் மேலும் செலவுத்தொகை ரூ.12000/- ஐ விதிமீறல் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் கடைக்காரர்களிடமிருந்து பெறப்பட்ட அபராதத் தொகையில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**ந.க.எண்.956/2020/எச்2**

**தீர்மான எண் : 166** அனுமதி வழங்கப்பட்டது.

13) இந்நகராட்சி பொது சுகாதார அவசிய அவசரம் கருதி கொரேனா தடுப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவிணங்களுக்கு ஏற்கனவே இந்நகர்மன்ற தீர்மான எண். 153 நாள் 30.06.2020ல் மன்ற அனுமதி பெறப்பட்ட நிலையில் தற்போது கொரேனா தொற்று வேகமாகவும் அதிக அளவிலும் பரவி வருவதால், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பிளக்ஸ் மூலம் விழிப்புணர்வு விளம்பரம் மேற்கொள்ள 10*4 அளவுள்ள 3 பிளக்ஸ் மற்றும் 2*1 அளவுள்ள 200 பிளக்ஸ் அச்சிடுவதற்கு 09.07.2020 அன்று கீழ்காணும் விவரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கபடுகிறது

| வ. எண் | விவரம் | மொத்த தொகை. ரூ. |
|---|---|---|
| 1 | ஈஸ் ஸ்டுடியோ, போடி | 7,050/- |
| 2 | Vizual Imaging, போடி | 5,700/- |

பொது சுகாதார அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Vizual Imaging, போடி, நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். மேலும் செலவினத்தை விதிமீறல் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் கடைக்காரர்களிடமிருந்து பெறப்பட்ட அபராதத் தொகையில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.956/2020/எச்2**

**தீர்மான எண் : 167** அனுமதி வழங்கப்பட்டது.

14) இந்நகராட்சி பொது சுகாதார அவசிய அவசரம் கருதி கொரேனா தடுப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவிணங்களுக்கு ஏற்கனவே இந்நகர்மன்ற தீர்மான எண். 153 நாள் 30.06.2020ல் மன்ற அனுமதி பெறப்பட்ட நிலையில் தற்போது கொரேனா தொற்று வேகமாகவும் அதிக அளவிலும் பரவி வருவதால், பொதுமக்களுக்கும் வர்த்தக நிறுவனங்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஆட்டோ மூலம் 24.06.2020 முதல் 17.07.2020 முடிய மொத்தம் 24 நாட்களுக்கு விழிப்புணர்வு விளம்பரம் மேற்கொள்ள கீழ்காணும் விவரப்படி 23.06.2020 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கபடுகிறது.

| வ. எண் | விவரம் | மொத்த தொகை. ரூ. |
|---|---|---|
| 1 | குமரன் ரேடியோஸ் & லைட் ஹவுஸ், போடி | 2,200/- |
| 2 | அம்மன் ரேடியோஸ் & லைட் ஹவுஸ், போடி | 2,300/- |
| 3 | ஸ்ரீ கௌமாரியம்மன் மியூசிக்கல்ஸ் & ரேடியோஸ், போடி | 2,000/– |

பொது சுகாதார அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஸ்ரீ கௌமாரியம்மன் மியூசிக்கல்ஸ் & ரேடியோஸ், போடி, நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். மேலும் செலவுத்தொகை ரூ.48000/- ஐ விதிமீறல் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் கடைக்காரர்களிடமிருந்து பெறப்பட்ட அபராதத் தொகையில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.956/2020/எச்2**
**தீர்மான எண் : 168** அனுமதி வழங்கப்பட்டது.

தனிஅலுவலர் (ம) ஆணையாளர்
போடிநாயக்கனூர் நகராட்சி